செ.வெ.எண்: 728

நாள் 6/11/07

# செய்தி வெளியீடு

## 73 ஆயிரம் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு ரூ 15 கோடி போனஸ் மற்றும் கருணைத்தொகை

## முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கு 2006–2007ஆம் ஆண்டிற்கான போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படுகிறது. போனஸ் சட்டத்தின் கீழ் வரும் கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்களில் மாதம் 5300 ரூபாய் ஆரம்ப சம்பள விகிதமும் அதற்கு குறைந்த சம்பள விகிதங்களும் கொண்ட பதவிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு போனஸ் சட்டத்தின்படி 10 ஆயிரம் ரூபாய் என்ற சம்பள உச்ச வரம்பிற்கு விலக்களித்து போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும் என்றும்;

இதன்படி போனஸ் சட்டத்தின் கீழ்வரும் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கு 8.33 சதவிகிதம் போனஸ் மற்றும் 1.67 சதவிகிதம் கருணைத் தொகையாக தலா 4 ஆயிரத்து 200 ரூபாய்க்கு மிகாமல் வழங்கப்படும் என்றும்;

ஒதுக்கக்கூடிய உபரித் தொகை உள்ள கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்களுக்கு ஒதுக்கக்கூடிய உபரித்தொகையின் அடிப்படையில் 20 சதவிகிதம் வரை தலா 8 ஆயிரத்து 400 ரூபாய்க்கு மிகாமல் வழங்கப்படும் என்றும் ;

போனஸ் சட்டத்தின் கீழ் வராத கூட்டுறவு இணையங்கள் மற்றும் மாவட்ட கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு தலா 1500 ரூபாயும், தொடக்க கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கு தலா 1,200 ரூபாய் கருணைத் தொகையாக வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ளார்.

இதன் மூலம் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் ஏறத்தாழ 73 ஆயிரம் பணியாளர்க்கு மொத்தம் 15 கோடி ரூபாய் போனசாகவும், கருணைத் தொகையாகவும் கிடைக்கும்.

க. சண்முகம்
அரசு செயலாளர்
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை–9

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை-9.